| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | **மதுரை** | காலம் : | **27/12/2023** | முதல் | **31/12/2023** | |
| | அறிக்கை எண் : | **103/ 2023** | வெளியீட்டு நாள் : | **26/12/2023** | | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21° - 22° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (21.12.2023 முதல் 25.12.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 31-12-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21/12 | 22/12 | 23/12 | 24/12 | 25/12 | தேதி | நாள்-1 27/12 | நாள்-2 28/12 | நாள்-3 29/12 | நாள்-4 30/12 | நாள்-5 31/12 |
| 0.3 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 2 | 4 | 5 | 4 |
| 25 | 31 | 31 | 32 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 31 | 30 | 30 | 29 | 29 |
| 23 | 21 | 21 | 22 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 22 | 21 | 21 | 20 | 20 |
| 4 | 5 | 4 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 7 | 8 | 8 | 7 |
| 79 | 80 | 85 | 80 | 86 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 100 | 90 | 90 | 90 | 90 |
| 90 | 67 | 56 | 70 | 65 | | 60 | 70 | 70 | 70 | 70 |
| 7 | 5 | 7 | 9 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 14 | 14 | 14 | 12 | 12 |
| வட மேற்கு | கிழக்கு | கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் டிசம்பர் 28, 29, 30 மற்றும் 31ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 29°-31° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-22° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 14 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

மேகமூட்டத்துடன் கூடிய ஈரப்பதமான வானிலை நிலவுவதால் விவசாயிகள் மஞ்சள் நிற **ஒட்டுபொறி** வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் **நடமாட்டத்தையும், ஊதா** நிற **ஒட்டுபொறி அட்டை வைத்து அசுவினி மற்றும் இலைத்துளைப்பான் நடமாட்டத்தையும்** கண்காணிக்கவும்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 14 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு

பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மல்லிகை, உளுந்து, கால்நடை.**

**மல்லிகை:**
மல்லிகை மலர்வகை பயிர்களில் நூற்புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. விவசாயிகள் தங்கள் வயல்களில் மண் மாதிரி எடுத்து நூற்புழு தாக்குதலைக் கண்காணிக்க வேண்டும்.

தாக்குதலின் அறிகுறியாக மல்லிகை செடிகளின் இலைகள் வெளிரிய இளம் மஞ்சளாகி பின்னர் கருகிவிடும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு 4 கிலோ என்ற அளவில் பேசிலோமைசிஸ் லிலாசினஸ் எனும் உயிரி இடுபொருளை வேர்ப்பாகத்தின் அருகில் இட்டு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

**உளுந்து:**
உளுந்து பயிரில் இலைவழி நுண்ணூட்டம் தெளிப்பது நல்லபலன் கிடைக்கும்.

இலை வழி நுண்ணூட்டமாக ஒரு லிட்டர் தண்ணீரில் 40 மில்லிகிராம் என்ஏஏ மற்றும் 100 மில்லிகிராம் சாலிசெலிக் அமிலம் கலந்து பூக்கும் தருணத்தில் ஒருமுறையும் மற்றும் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் தெளிக்க வேண்டும்.

நெல் தரிசு பயறு வகைப் பயிர்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம் டிஏபி, பூக்கும் தருணத்தில் ஒருமுறையும் மற்றும் 15 நாட்கள் கழித்தும் தெளிக்க வேண்டும்.

மானாவாரி மற்றும் இறவை பயிர்களுக்கு ஒரு லிட்டர் தண்ணீரில் 20 கிராம் டிஏபி அல்லது 20 கிராம் யூரியா கலந்து பூக்கும் தருணத்தில் ஒருமுறையும் மற்றும் 15 நாட்கள் கழித்தும் தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**
நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில் தங்களது கால்நடைகளுக்கு கானை நோய் வர வாய்ப்பு உள்ளது. இந்நோயிலிருந்து தங்கள் மாடுகளை காப்பற்ற விவசாயிகள் ஜனவரி மாதத்தில் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களின் மாடுகளுக்கு கால்கானை வாய்க்கானை (கோமாரி) நோய்க்கான தடுப்பூசி மருந்தினைப் போட்டுக் கொள்ளவும்.